RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 280 | அக்டோபர் 13, 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# மதுராந்தகம், தாராபுரம் எம்எல்ஏக்கள் பதவியேற்பு: தவெக பலம் 109 ஆக உயர்வு

சென்னை: அக்.13-

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற தவெக எம்எல்ஏக்கள் இன்று சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

நடந்து முடிந்த மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் போட்டியிட்ட தவெக வேட்பாளர்களான மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகியோர் வெற்றிபெற்றனர். இரு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் கடந்த அக். 9ம் தேதி வெளியானது.

இதனை தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று மதுராந்தகம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினராக மரகதம் குமரவேல், தாராபுரம் எம்எல்ஏவாக சத்தியபாமா ஆகியோர் சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர்.

தவெக எம்எல்ஏக்களாக இருவரும் பதவியேற்றுக் கொண்ட நிகழ்வின்போது, அமைச்சர்கள் ஆனந்த், செங்கோட்டையன், அருண்ராஜ், ராஜ்மோகன் ஆகியோர் உடன் இருந்தனர். இவர்கள் இருவரும் எம்எல்ஏக்களாக பதவியேற்றுக் கொண்டதால் தமிழக சட்டப்பேரவையில் தவெகவின் பலம் 109 ஆக அதிகரித்துள்ளது.



## “மருத்துவப் பணியாளர்களை கைது செய்தது அராஜகப் போக்கு” - தினகரன் கண்டனம்



சென்னை: அக்.13-

‘பணிநிரந்தரம், மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட இருந்த பல்நோக்கு மருத்துவப் பணியாளர்கள் வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதனை மீறி போராட வந்தவர்கள் வலுக்கட்டாயமாக கைது செய்திருப்பது கொடுங்கோல் ஆட்சி’ என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘பணி நிரந்தரம், தற்செயல் விடுப்பு, பணி மாறுதல் கலந்தாய்வு, மருத்துவக் காப்பீடு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் முன்பாக போராட இருந்த பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கு அனுமதி மறுத்து, அவர்களை ஆங்காங்கே வீட்டுக் காவலில் அடைத்து வைத்ததோடு, அதனை மீறி போராட வந்தவர்களை குண்டுக்கட்டாக கைது செய்திருக்கும் காவல் துறையின் அராஜகப் போக்கு கடும் கண்டனத்துக்குரியது.

ஜனநாயகம் வழங்கியிருக்கும் அடிப்படை உரிமைகளில் ஒன்றான போராட்டத்தின் மூலமாக தங்களின் கோரிக்கைகளை அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல முயன்ற பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்களை குற்றவாளிகளை போல சித்தரித்து அவர்களை வீட்டுக் காவலில் வைத்தும், கைது செய்திருப்பதும் அப்பட்டமான மனித உரிமை மீறல் ஆகும்.

தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் தொடங்கி விவசாயிகள், மாணவர்கள், மாற்றுத் திறனாளிகள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், மின்சாரத் துறை பணியாளர்கள் என அனைவரும் நாள்தோறும் தங்களின் உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில், தவெக அரசு அனைத்து தரப்பு மக்களுக்கான அரசு என முதல்வர் விஜய் பெருமை பேசிக் கொண்டிருப்பது வெட்கக் கேடானது.

போராட்டங்களுக்கு அனுமதி மறுப்பது, போராட்டத்துக்கு தலைமை தாங்கும் பிரதிநிதிகளை வீட்டுக் காவலில் அடைப்பது, காவல் துறையை பயன்படுத்தி அடக்குமுறையை ஏவுவது என தவெக ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அத்துமீறல்களும், அராஜகப் போக்குகளும் நாம் தமிழகத்தில் தான் வாழ்கிறோமோ அல்லது அடிமை நாட்டில் வாழ்கிறோமோ என்ற சந்தேகத்தை பொதுமக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

எனவே, தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டுள்ள பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களை உடனடியாக விடுவிப்பதோடு, கைது செய்யப்பட்டவர்களை எந்தவித நிபந்தனையுமின்றி விடுவிப்பதோடு, அவர்களின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தர முன்வர வேண்டும் என மருத்துவத் துறையையும், தவெக அரசையும் வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

## “முதல்வர் விஜய்க்கு சால்வை அணிவித்ததை கொச்சைப்படுத்த வேண்டாம்” - நயினார் நாகேந்திரன்



சென்னை: அக்.13-

“ஒரு கட்சி தலைவர் என்கிற முறையில் முதல்வர் விஜய்க்கு நான் சால்வை போட்டு மரியாதை செலுத்தினேன். அதை யாரும் கொச்சைப்படுத்த வேண்டாம்” என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் “மின்வெட்டு பிரச்சினை நிறைய இருக்கிறது. அந்த வேலையை பார்க்காமல், நான் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்றது குறித்து கேள்வி கேட்பதால் மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது?

நிறைய முன்னுதாரணங்கள் இருக்கிறது. அதை நான் சொல்ல விரும்பவில்லை. அப்படி சொன்னால், தொடர்ந்து நான் தவெகவை விமர்சிப்பதாக இருக்கும்.

தமிழகம் வளர்ச்சியடைந்த மாநிலமாக இருக்க வேண்டும். இதுதான் எங்களின் கோரிக்கையும். ஒரு கட்சி தலைவர் என்கிற முறையில் முதல்வர் விஜய்க்கு நான் சால்வை போட்டு மரியாதை செலுத்தினேன். அதை யாரும் கொச்சைப்படுத்தாதீர்கள். ஒரு நாட்டின் பிரதமர் வரும்போது, அவரை முதல்வர் வரவேற்பது மரபு” என்றார்.

## “போராடுபவர்களை அழைத்து பேசாமல் அடக்குமுறையை ஏவுவதற்குப் பெயர்தான் மாற்றமா?”

சென்னை: அக்.13-

விவசாயிகள் - மாணவர்கள் - செவிலியர்கள் என ஜனநாயக வழியில் போராட்டம் செய்யும் எந்தப் பிரிவினரையும் நேரில் அழைத்துப் பேசாமல் அடக்குமுறையை ஏவுவதற்குப் பெயர் தான் மாற்றமா? என தவெக தலைமையிலான தமிழக அரசை சட்டப் பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், “தேர்தல் முறைகேடுகளுக்கு எதிராக டெல்லிக்கு போராட செல்லும் இளைஞர்களை ஆங்காங்கே கைது செய்யும் ஓனர்களின் பாணியில், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னைக்கு வந்து போராடவிருந்த பன்னோக்கு மருத்துவப்பணியாளர்களை ஆங்காங்கே வீட்டுக்காவலில் வைக்கும் இந்த ஃசோபா மாடல் அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு மருத்துவப்பணியாளர்களுக்கு தந்த வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு போராட்டத்திற்குப் புறப்படும் முன்பே வீட்டில் வைத்து கைது செய்யும் அளவுக்கு இந்த ரீல்ஸ் அரசு அராஜகம் செய்வது ஏன்?

விவசாயிகள் - மாணவர்கள் - செவிலியர்கள் என ஜனநாயக வழியில் போராட்டம் செய்யும் எந்தப் பிரிவினரையும் நேரில் அழைத்துப் பேசாமல் அடக்குமுறையை ஏவுவதற்குப் பெயர் தான் மாற்றமா?

மருத்துவப்பணிகளின் முதுகெலும்பாக இருக்கும் பன்னோக்கு பணியாளர்களை உடனே விடுதலை செய்து, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த டம்மி முதல்வர் முன்வர வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வீட்டு மேற்கூரை சூரிய மின்சாரத் திட்டத்தில் ரூ.1 லட்சம் வரை மானியம்!

### சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனத்தில் விழிப்புணர்வுக் கூட்டங்கள்!



மானாமதுரை அக்.13

சிவகங்கை மாவட்டத்தில் பிரதம மந்திரி சூர்ய கர் இலவச மின்சாரத் திட்டத்தின் (PM Surya Ghar Muft Bijli Yojana) கீழ் வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி உற்பத்தி அமைப்புகளை நிறுவுவதற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவிகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய வீட்டு உரிமையாளர்கள் விண்ணப்பித்துப் பயன்பெறலாம்.

சூரிய மின்சாரத் திட்டத்திற்கான மானிய விவரங்கள்!

வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் மானிய விவரங்கள் வருமாறு:

| சூரிய மின்சார அமைப்பின் திறன் | ஒன்றிய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 கிலோவாட் | ₹30,000 | ₹5,000 | ₹35,000 |
| 2 கிலோவாட் | ₹60,000 | ₹10,000 | ₹70,000 |
| 3 கிலோவாட் மற்றும் அதற்கு மேல் | ₹78,000 | ₹22,000 | ₹1,00,000 |

திட்டப் பணிகள் முடிவடைந்த பின்னர், உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு மானியத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சூரிய மின்தகடுகள் அமைப்பதற்கு வங்கிகள் மூலம் கடனுதவி பெறுவதற்கான வசதிகளும் உள்ளதாக அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்கட்டணத்தைக் குறைக்க வாய்ப்பு!

ஒரு கிலோவாட் திறனுடைய சூரிய மின்சார அமைப்பு, சூரிய ஒளியின் அளவு மற்றும் பிற சூழ்நிலைகளைப் பொறுத்து நாளொன்றுக்கு சுமார் 4 முதல் 5 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடும்.

குறிப்பாக அதிக அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் வீடுகளில் மேற்கூரை சூரிய மின்சார அமைப்புகளை நிறுவுவதன் மூலம் மின்கட்டணச் செலவைக் குறைக்க வாய்ப்புள்ளது.

மூன்று இடங்களில் விழிப்புணர்வுக் கூட்டங்கள்!

மானாமதுரை மின்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சேவா சேது அபியான் திட்டத்தின் மூலம் சூரிய மின்சாரத் திட்ட விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடைபெற உள்ளன.

கூட்டங்கள் நடைபெறும் தேதிகள்:

13-10-2026, செவ்வாய்க்கிழமை மானாமதுரை

15-10-2026, வியாழக்கிழமை இளையான்குடி

16-10-2026, வெள்ளிக்கிழமை திருப்புவனம்

இக்கூட்டங்களில் மின் நுகர்வோர் கலந்துகொண்டு சூரிய மின்சாரத் திட்டம், மானிய உதவிகள் மற்றும் விண்ணப்பிக்கும் நடைமுறைகள் குறித்து அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வென்ற ரயில்வே வீரர்களுக்கு பாராட்டு

சென்னை: அக்.13-

ஜப்பானில் நடைபெற்ற 20-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர்களை தெற்கு ரயில்வே பொதுமேலாளர் சுப்பாராவ் பாராட்டியுள்ளார்.

தெற்கு ரயில்வேயின் பாலக்காடு கோட்டத்தில் வணிக எழுத்தராக பணியாற்றும் தமிழகத்தைச் சேர்ந்த செல்வி வித்யா ராம்ராஜ், ஆசிய விளையாட்டில் 3 வெவ்வேறு பிரிவுகளில் பதக்கங்களை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இதுபோல, தெற்கு ரயில்வேயின் சென்னை தலைமையக பணியாளர் பிரிவில் மூத்த எழுத்தராகப் பணியாற்றும் மயிலாடுதுறையைச் சேர்ந்த செல்வி பரணிகா இளங்கோவன், மகளிர் போல் வால்ட் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். ஆசிய விளையாட்டு வரலாற்றில் இந்த போட்டிப் பிரிவில் இந்தியா பெறும் முதலாவது பதக்கம் இதுவாகும்.

திருச்சிராப்பள்ளி கோட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர் ஆர்.ராஜேஷ், ரிலே போட்டியில் இந்திய அணிக்கு வெண்கலப் பதக்கத்தை உறுதி செய்தார். விளையாட்டு வீரர்களின் இந்த சாதனையைப் பாராட்டி, தெற்கு ரயில்வே பொது மேலாளர் சுப்பாராவ், தெற்கு ரயில்வே விளையாட்டு சங்கத்தின் தலைவர் கணேஷ் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

மேலும், இப்போட்டிகளில் பெருமை சேர்த்த இதர ரயில்வே ஊழியர்களான தவ்பீக் (திருவனந்தபுரம்), செல்வி அநாமிகா (பாலக்காடு), செல்வி டேவிட்

(சேலம் - ஈரோடு) ஆகியோருக்கும், அவர்களது பயிற்சியாளர்கள், தொழில்நுட்பக் குழுவினருக்கும் தெற்கு ரயில்வே தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளது.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



தாம்பரத்தில் மாவட்ட மருத்துவ அணி செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட தமிழக வெற்றிகழகம் சார்பில் மகளிருக்கான ஆரோக்கிய நிகழ்ச்சி,

## மாரடைப்பு ஏற்படும் போது முதலுதவி சிக்கிச்சை அளிப்பது குறித்து CPR விழிப்புணர்வு செய்முறை பயிற்ச்சியை அமைச்சர் சரத்குமார் முன்னிலையில் நடைபெற்றது

தாம்பரம், அக்.13–

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரத்தில் மாவட்ட மருத்துவ அணி செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட தமிழக வெற்றிகழகம் சார்பில் மகளிருக்கான ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட மருத்துவ அணி தலைமை டாக்டர் சரவணன் ஏற்பாட்டில் தாம்பரம் மேற்கு பகுதி கழக செயலாளர் பிரவீன் குமார் முன்னிலையில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக அமைச்சர் சரத்குமார் கலந்து கொண்டு மகளிருக்கான ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்து மாரடைப்பு ஏற்படும் போது எவ்வாறு சிகிச்சை அளிப்பது குறித்து மருத்துவர்கள் ஆலோசனைபடி செய்து நோயாளிகளை குணப்படுத்துவது குறித்து சிறப்புரையாற்றுனார். நிகழ்ச்சியில் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டால் முதலுதவி சிக்கிச்சை அளிக்கும் செய்முறை பயிற்ச்சியை மருத்துவர்கள் அமைச்சர் சரத்குமார் மற்றும் தாம்பரம் மேற்கு பகுதிகழக நிர்வாகிகள் முன்னிலையில் செய்து காண்பித்து இதுபோன்று நீங்களும் மற்றவர்களுக்கு அவசரகாலத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்கலாம் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மருத்தவ அணி நிர்வாகிகள் டாக்டர் ராமசுப்பிரமணியன், டாக்டர் கணேஷ், டாக்டர் விஜயகுமார், டாக்டர் ராஜேஷ், டாக்டர் உஷா, வடமேற்கு மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள், தாம்பரம் பகுதி நிர்வாகிகள், மகளிரணியினர், மருத்துவர்கள் உட்பட ஏராளமான தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 345 மனுக்கள் பெறப்பட்டன!

தகுதியான மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் உத்தரவு!



சிவகங்கை, அக்.13–

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்துகொண்டு, தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மொத்தம் 345 மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் வழங்கினர்.

**வீட்டுமனைப் பட்டா, உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள்!**

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்கள் அளித்தனர்.

குறிப்பாக, இலவச வீட்டுமனைப் பட்டா, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பிலான உதவித்தொகை மற்றும் மறுவாழ்வு உதவிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டன.

**மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல்!**

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 345 மனுக்களையும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களின் பரிசீலனைக்கு அனுப்பி, தகுதியுடைய மனுக்கள் மீது தனிக் கவனம் செலுத்தி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ் அறிவுறுத்தினார்.

மேலும், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு காண்பதில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

**அரசு அதிகாரிகள் பங்கேற்பு!**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப. சைலேந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலகிருஷ்ணன் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



## ஆற்காடு அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் சமேத கமண்டலேஸ்வரர் ஆலய நவராத்திரி துவக்க விழா

ராணிப்பேட்டை, அக்.13–

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டம் முப்பதுவெட்டு கிராமம் கீரைக்கார தெருவில் எழுந்தருளி அருள்பாளித்து வரும் விஸ்வகர்மா சமூகத்தைத்தினரின் அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் சமேத கம்பண்டலேஸ்வரர் ஆலய நவராத்திரி துவக்க விழா விமர்சையாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஸ்ரீ ஆதிசிவ லிங்காச்சார்ய குரு ஸ்வாமிகள் ஆதினம் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு சட்டமன்றத் உறுப்பினர் எஸ்.எம்.சுகுமார், சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய முன்னால் அறங்காவலர் ஜி விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அம்மனுக்கு 108 ஓம திரவியங்கள் கொண்டு சிறப்பு யாகம் செய்யப்பட்டு தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை ஆலய அறங்காவலர்கள் குமார், தட்சிணாமூர்த்தி, கணேசன், இளைஞர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் ஏற்பாடு செய்திருந்தனர் இதில் பக்தர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் .



## அம்பத்தூர் இசக்கி அம்மன் ஆலயத்தில் முதல் நாள் நவராத்திரி திருவிழா

மாதவரம், அக்.13–

அம்பத்தூர் அடுத்த கள்ளிக்கு ப்பம் ஓம்சக்தி நகரில் அமைந்துள்ள ஓம் சக்தி இசக்கியம்மன் ஆலயத்தில் முதல் நாள் நவராத்திரி திருவிழா ஆலய நிர்வாக செயலாளர் ஆறுமுகம் தலைமையில் சிறப்பாக நடை பெற்றது. நிகழ்ச்சியில் மூலவர் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் சந்தனகாப்பு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை கொலுவாக வைத்து சிறப்பு பூஜைகளுடன் கூடிய ஆன்மிக வழிபாடுகள் மற்றும் பரதநாட்டியம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து முதல் நாள் நவராத்திரி விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்



## ஆற்காடு மகாத்மா காந்தி இலவச முதியோர் இல்லத்தில் 10ம் ஆண்டு நவராத்திரி துவக்க விழா

ராணிப்பேட்டை, அக்.13–

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு மகாத்மா காந்தி இலவச முதியோர் இல்லத்தில் நவராத்திரி துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு முதியோர் இல்ல தலைவர் ஜெ. லட்சுமணன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் எஸ். ஆர். பி. பென்ஸ்பாண்டியன் முன்னிலை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ்பாண்டியன் கலந்து கொண்டு பூஜையை துவக்கி வைத்து சிறப்பித்தார். விநாயகர், முருகர், லட்சுமி, சரஸ்வதி, பெருமாள், கும்பகர்ணன், கார்த்திகை பெண்கள், 12 ராசி பொம்மைகள், திருமண கோல பொம்மைகள், பல்வேறு புராண கதைகள் சித்தரிக்கும் பொம்மைகள் உள்ளிட்ட ஏராளமான பொம்மைகளை கொலுவாக வைத்து வழிபட்டனர். இதில் திமுக ஒன்றிய செயலாளர் எம். வி. பாண்டுரங்கன் காந்திமதி, கிண்டி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இறுதியில் அனைவருக்கும் மங்களப் பொருட்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது.



## திருவள்ளூரில் மாவட்ட அளவிலான கராத்தே போட்டி

மாதவரம், அக்.13–

திருவள்ளூரில் 29-வது மாவட்ட அளவிலான கராத்தே போட்டி திருவள்ளூர் மாவட்ட கராத்தே சங்கத்தின் தொழில்நுட்ப இயக்குனர் ஆர். விஜயராகவன் ஏற்பாட்டில் அசோசியேஷன் தலைவர் ரவி, துணைத் தலைவர் ரவிச்சந்திரன், செயலாளர் தட்சிணாமூர்த்தி, பொருளாளர் தனசேகரன், பஞ்சாட்சரம், சண்முகசுந்தரம், சற்குணம், அப்புராஜ். ரமேஷ்குமார், ராஜேஷ் ஆகியோர் ஒருங்கிணைப்பில் சிறப்பாக நடைபெற்றது.இப்போட்டியில் பல்வேறு மாவட்டத்திலிருந்து சுமார் 800-க்கும் மேற்பட்ட பலவேறு வயதினருடைய கராத்தே வீரர்கள் கட்டா மற்றும் குமிதே பிரிவுகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றனர். பின்னர் நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மிஸ்டர் சவுத்இந்தியா ஆணழகன் எம்.வினோத்குமார் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கராத்தே வீரர்களான மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். இதில் வேலுமணி, லட்சுமிகாந்தன், கிருஷ்ண குமார். தியாகராஜன், தணிகைமலை, முத்துக்குமார். தீபன், கோகுல்ராஜ், சண்முகசுந்தரம் ,புவனேஷ், இளையமாறன் உள்பட பலர் கலந்து கொண்டனர். மேலும் இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் மாநில அளவிலான போட்டிக்கு அனுப்பப்பட உள்ளனர். என்பது குறிப்பிடப்பட்டது



## திருப்பரங்குன்றம் தீபத்தூணில் தீபம் ஏற்ற அனுமதி கோரி இந்து முன்னணி ஆர்ப்பாட்டம்!

ராணிப்பேட்டை அக்_13–

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையம் அருகே, திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்ற தமிழக அரசு அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தி இந்து முன்னணி அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தீபம் ஏற்ற அனுமதி வழங்க வேண்டும் எனக் கோரி, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதில் பேசிய இந்து முன்னணியின் வேலூர் கோட்டத் தலைவர் ராஜேஷ், திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிமன்றம் உத்தரவிட்டும், அப்போதைய திமுக அரசு அந்த உத்தரவை மதிக்காமல் இந்து மக்களுக்கு எதிராகச் செயல்பட்டதாகக் குற்றம்சாட்டினார்.

மேலும், முருகப்பெருமானின் வேல் வதம் செய்வதைப் போல திமுக ஆட்சி வீழ்த்தப்பட்டதாகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சொந்தத் தொகுதியில் தோல்வி ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இதுபோன்ற நிலை தற்போதைய தமிழக அரசுக்கு ஏற்படக்கூடாது எனத் தெரிவித்த அவர், திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்ற தமிழக அரசு அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.



## ஸ்ரீகாயத்திரிதேவி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் முதல் நாள் நவராத்திரி விழா

மாதவரம், அக்.13–

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி ஈஸ்வரன் கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீகாயத்திரிதேவி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் முதல் நாள் நவராத்திரி திருவிழா சித்தர் அடியான் குருஜி ஜெ.பூபாலன் சுவாமி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சயில் ஸ்ரீகாயத்திரிதேவி அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து அங்காள பரமேஸ்வரி அம்மன் அலங்காரம் செய்யப்பட்டு பின்னர் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களை கொலுவாக வைத்தும் திருவிளக்கு அம்மன் அலங்கரிக்கப்பட்டு பழங்கள் மற்றும் இனிப்புகளை படையலிட்டு பக்தர்களின் ஆன்மீக பாடல்களுடன் மூலவர், சித்தர்கள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு தூப தீப ஆராதனை காண்பித்து முதல் நாள் நவராத்திரி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் குருமாதா, யோகேஷ் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினர்


**மாண்பை வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை**

**ந. க.ஆ1 /3382/2026**

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் கதவு எண்.13 கட்டுக்கன்பட்டி நரியங்குடி அஞ்சல் என்ற முகவரியில் வசித்து வரும் எனது தாயார் லேட். சிட்டால் க/பெ.பெரியகருப்பன் கடந்த 03.10.2020-ம் தேதியில் சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் நரியங்குடி அஞ்சல் கிராமத்தில் மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மனுதாரர்**
**ஆறுமுகம்**
**த/பெ.பெரியகருப்பன்**
**கதவு எண்.13,கட்டுக்கன்பட்டி,**
**நரியங்குடி அஞ்சல்,**
**சிவகங்கை வட்டம்,**
**சிவகங்கை மாவட்டம்.**



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சிவகுரு பிரபாகரன் தலைமையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை குறைகளை மாவட்ட ஆட்சியர் கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன் மற்றும் பரமக்குடி சார் ஆட்சியர் ச.வினோதினி ஆகியோர் உடனிருந்தனர்.

# பழனியில் விவசாயிகள் காலவரையற்ற போராட்டம் - பட்டா கேட்டு கோட்டாட்சியர் அலுவலகம் முன் தர்ணா



திண்டுக்கல், அக். 13-

திண்டுக்கல் மாவட்டம் பழனி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு, 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தரையில் அமர்ந்து காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

பழனி அருகே உள்ள பெரியம்மாபட்டி, ஆண்டிபட்டி உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கடந்த 1982-ம் ஆண்டு சுமார் 1500 விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் முதல் மூன்று ஏக்கர் வரை நிலங்கள் ஒதுக்கப்பட்டது. கடந்த 44 ஆண்டுகளாக அந்த நிலங்களில் விவசாயம் செய்து வரும் நிலையில், இதுவரை அவர்களுக்கு அரசு சார்பில் உரிய பட்டா வழங்கப்படவில்லை என கூறப்படுகிறது

பட்டா கோரி கடந்த சில மாதங்களாக மாவட்ட ஆட்சியர், முதல்வர் தனிப்பிரிவு உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளுக்கு நேரடியாகவும், மனுக்கள் மூலமாகவும் வலியுறுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

இதனால் விரக்தியடைந்த விவசாயிகள் இன்று பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு தரையில் அமர்ந்து காலவரையற்ற உண்ணா விரத போராட்டத்தை தொடங்கினர்.

"பட்டா வழங்கும் வரை போராட்டம் தொடரும்"*என விவசாயிகள் திட்டவட்டமாக தெரிவித்தனர்.

இந்த போராட்டத்திற்கு உழவர் உரிமை இயக்க மாநில தலைவர் அருள் ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

*பேட்டி: அருள் ஆறுமுகம், உழவர் உரிமை இயக்க மாநில தலைவர்

பட்டா கோரி விவசாயிகள் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சம்பவம் பழனி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பம்மதுகுளம் ஸ்ரீ வெங்கடேசபெருமாள் ஆலயத்தில் புரட்டாசி மாத திருவிழா



மாதவரம், அக்.13-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ வெங்கடேச பெருமாள் ஆலயத்தில் 131-ம் ஆண்டு புரட்டாசி மாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் சுப்பிரபாரதத்துடன் பொதுதனியன், திருபல்லாண்டு சேவை, திருப்பள்ளிஎழுச்சி, திருப்பாவை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் உற்சவர் வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பித்து மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.



# தேனியில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 456 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன

தேனி அக்.13-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்.வ.சிவகிருஷ்ண மூர்த்தி, தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 456 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் , பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். முன்னதாக, மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், பெரியகுளம் சார் ஆட்சியர் .தவலேந்து, தனித்துணை ஆட்சியர். கவிதா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்). கதிர்வேல் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பர்கூர் அரசு மருத்துவமனையில் 1,13,800 பேருக்கு காலை உணவு வழங்கி சாதனை படைத்த சங்கத்தின் 6ம் ஆண்டு துவக்க விழா திமுக மாவட்ட செயலாளர் மதியழகன் பங்கேற்பு



கிருஷ்ணகிரி, அக். 13-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அரசு மருத்துவிமனையில் கடந்த 5 ஆண்டுகளில் 1,13,800 பேருக்கு காலை உணவு வழங்கி சாதனை படைத்த சங்கத்தின் 6ம் ஆண்டு துவக்க விழாவில் திமுக மாவட்ட செயலாளர் மதியழகன் பங்கேற்றார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில், அறம் செய்ய விரும்புவோர் சங்கத்தில், ஓய்வு பெற்ற கல்வி அதிகாரிகள், டி.எஸ்.பி., வக்கீல்கள், ஆசிரியர்கள், டாக்டர்கள், அரசு ஊழியர்கள், ஜவுளிக் கடை உரிமையாளர்கள் என, 33 முதல் 88 வயது வரை 70 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்கள் கடந்த 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் தேதி முதல், பர்கூர் அரசு மருத்துவமனை நோயாளிகள் 50 பேருக்கும், சிறப்பு நாட்களில் 100 பேருக்கும் தினமும் காலை உணவை வழங்கி வருகின்றனர். நான்கு இட்லி, ஒரு வடை, முட்டை, வாழைப்பழம், கடலை பர்ப்பி, குடிநீர் என சரிவிகித உணவாக வழங்கும் இவர்கள், கடந்த, 5 ஆண்டுகளில், 1,827 நாட்களில், 1,13,800 பேருக்கு உணவு வழங்கி சாதனை படைத்துள்ளனர்.

இந்த அமைப்பின் 6ம் ஆண்டு துவக்க விழா நடந்தது. இந்த விழாவில் முன்னாள் எம்எல்ஏ.வும், கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான மதியழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மறைந்த தலைவர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, 6ம் ஆண்டு துவக்கவிழாவை, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பேசினார். பின்னர் அமைப்பின் பொறுப்பாளர்களுக்கு சால்வை அணிவித்து அனைவரையும் பாராட்டினார்.

இது குறித்து அமைப்பின் தலைவர் முனுசாமி கூறுகையில், கொரோனா கால கட்டத்தில் வெகு தொலைவில் இருந்து மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் உணவு இன்றி மிகவும் சிரமத்திற்குள்ளாகினர். இதையடுத்து தூய்மை பர்கூர் அமைப்பை உருவாக்கி, தினமும் காலை உணவை வழங்கினோம். தன்னார்வலர்கள் பலர் எங்களுக்கு உதவ முன்வந்ததால், இந்த அமைப்பின் பெயரை, அறம் செய்ய விரும்புவோர் சங்கம் என மாற்றி, வங்கிக் கணக்கை துவங்கி அந்த சேமிப்பில் இருந்து உணவை வழங்கி வருகிறோம். தற்போது 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுத்து அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.



# ஊத்துக்கோட்டை அருகே சுருட்டபள்ளி கோவிலில் நவராத்திரி சிறப்பு வழிபாடு

## ராஜராஜேஷ்வரி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அம்மன் தரிசனம்

திருவள்ளூர், அக்.11-

ஊத்துக்கோட்டை அருகே நாகலாபுரம் மண்டல் சுருட்டப்பள்ளி ஸ்ரீ பள்ளி கொண்டீஸ்வரர் கோவில் நவராத்திரிஉற்சவத்தை முன்னிட்டு அங்கு அமைந்துள்ள அனைத்து தெய்வங்களின் சிலைகளுக்கும் காலை 8 மணி அளவில் சிறப்பு பூஜை மற்றும் அபிஷேகம் செய்து ராஜராஜேஸ்வரி அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர்.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது



தேனி, அக்.13-

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 16.10.2026வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் .வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.

தேனிமாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களாக வழங்கலாம். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தெரிவித்துள்ளார்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக நடைபெற்ற, மாற்றுத்திறனாளிகளுக்கான குறை தீர்க்கும் நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.



# பசுமைக் கருவூலமாகத் திகழும் கொட்டாம்பட்டி ஊராட்சி நர்சரி! ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே பல்வேறு மரவகைகள் வளர்ப்பு இயற்கை வளத்தைப் பெருக்கும் முயற்சி

மதுரை: அக்,13-

கிராமப்புறங்களில் மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மரக்கன்றுகளை நடவு செய்வது மட்டுமின்றி, அவற்றைத் தேவையான அளவில் உற்பத்தி செய்து, நடவு செய்வதற்குத் தயாரான நிலையில் பாதுகாத்து வளர்ப்பதும் அவசியமாகிறது. இந்த நோக்கில், மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு அருகிலேயே அமைந்துள்ள கொட்டாம்பட்டி ஊராட்சி நர்சரியில் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஊராட்சிப் பகுதிகளில் பசுமையை அதிகரிப்பதற்குத் தேவையான மரக்கன்றுகளை ஒரே இடத்தில் வளர்த்துப் பராமரிப்பது, எதிர்கால மரம் நடும் திட்டங்களுக்கு அடித்தளமாக அமைகிறது. அந்த வகையில், கொட்டாம்பட்டி ஊராட்சியின் நர்சரி பல்வேறு மரவகைகளைக் கொண்ட பசுமை வளாகமாகத் திகழ்கிறது.

இந்த நர்சரியில் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்ட மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக, புளி, வேங்கை, புங்கை, மகாகனி, இலுப்பை, மஞ்சள் கடம்பு உள்ளிட்ட மரவகைகளுடன் பல்வேறு இதர மரக்கன்றுகளும் இடம்பெற்றுள்ளன.

மரக்கன்றுகளின் வகை வாரியான விவரங்கள்:

* வேங்கை 2,271
* மகாகனி 1,862
* புங்கை 1,955
* மருதம் 15
* மஞ்சள் கடம்பு 860
* இலுப்பை 1,894
* புளி 2,510
* நொச்சி 150
* ஆவி 253
* இலவம் 210
* பலா 50
* இதரக் கன்றுகள் 256
* ஈட்டி 55

இந்த விவரங்களின்படி, பட்டியலிடப்பட்ட மரக்கன்றுகளின் எண்ணிக்கை சுமார் 13ஆயிரம்.

மரக்கன்றுகள் வளர்ப்பு என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் மட்டுமல்லாமல், கிராமத்தின் எதிர்கால நிலப்பரப்புத் திட்டமிடலுடனும் தொடர்புடையது. ஊராட்சியில் உள்ள பொது இடங்கள், பள்ளி வளாகங்கள், அரசு அலுவலகங்கள், சாலையோரங்கள் மற்றும் பொருத்தமான திறந்தவெளிப் பகுதிகளில் மரக்கன்றுகளை நடவு செய்வதற்கு இத்தகைய நர்சரிகள் உதவக்கூடும்.



அதே நேரத்தில், ஒவ்வொரு மரவகைக்கும் ஏற்ற மண், நீர் வசதி மற்றும் வளர்ச்சிக்கான இடம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நடவு செய்வது அவசியம். மரக்கன்றுகளைச் சரியான இடத்தில் நடவு செய்து, அவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ற பராமரிப்பை மேற்கொள்வதன் மூலம் நீண்டகாலப் பயனைப் பெற முடியும்.

கொட்டாம்பட்டி ஊராட்சி நர்சரி, ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்கு அருகிலேயே அமைந்திருப்பதால், அதன் செயல்பாடுகளைக் கண்காணித்து, மரக்கன்றுகளின் வளர்ச்சியைத் தொடர்ந்து மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது.

ஊராட்சி செயலாளர் சிவா உள்ளிட்ட சம்பந்தப்பட்ட பணியாளர்கள், நர்சரியில் உள்ள மரக்கன்றுகளின் எண்ணிக்கை, அவற்றின் வளர்ச்சி நிலை மற்றும் பராமரிப்புத் தேவைகள் குறித்து தொடர்ந்து கவனம் செலுத்தி வருவது முக்கியமானதாகும். மேலும், நர்சரியில் உள்ள கன்றுகள் எப்போது, எந்தெந்த இடங்களில் நடவு செய்யப்படுகின்றன என்ற விவரங்களைப் பதிவு செய்து வைத்திருப்பதும் பயனுள்ளதாக இருக்கிறது.

ஒரு நர்சரியின் செயல்பாட்டை அங்கு வளர்க்கப்படும் மரக்கன்றுகளின் எண்ணிக்கையால் மட்டும் மதிப்பிட முடியாது. அவற்றில் எத்தனை கன்றுகள் நடவு செய்யப்பட்டன, நடவு செய்யப்பட்டவற்றில் எத்தனை உயிர்ப்புடன் வளர்கின்றன, எத்தனை மரங்களாக உருவாகின்றன என்பதையும் கண்காணிக்க வேண்டும்.

கொட்டாம்பட்டி ஊராட்சியில் வளர்க்கப்படும் மரக்கன்றுகள் உரிய இடங்களில் நடவு செய்யப்பட்டு, அவற்றின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படும்போது, இந்த நர்சரியின் பயன் கிராமத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெளிப்படும்.

இன்றைய பராமரிப்பு நாளைய பசுமையைத் தீர்மானிக்கிறது. எனவே, கொட்டாம்பட்டி ஊராட்சியின் மரக்கன்று வளர்ப்புப் பணி, முறையான நடவு மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் நீண்டகால இயற்கை வளமாக உருவெடுக்க வேண்டும்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், குடும்பஅட்டை, வேலைவாய்ப்பு, முதியோர், விபத்து நிவாரணம், உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்படுகின்றன.




■ மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தகவல் அறியும் உரிமை சட்ட விழிப்புணர்வு வார விழாவை(05.10.2026 முதல் 12.10.2026 வரை)முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் உடன் உள்ளார்.





## மதுரையில் போக்குவரத்து வார்டன்கள் அமைப்பின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம்: சிறப்பாகப் பணியாற்றிய போக்குவரத்து வார்டன்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிப்பாராட்டு!

மதுரை, அக்.13-

தமிழ்நாடு காவல்துறை போக்குவரத்து வார்டன்கள் அமைப்பின் (Tamil Nadu Police Traffic Warden Organisation TPTW) மதுரை மாநகர ஆண்டு பொதுக்குழுக் கூட்டம், அக்டோபர் 11-ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு மதுரையில் உள்ள புரொடக்டிவிட்டி அரங்கில் (Productivity Hall) நடைபெற்றது.




**போக்குவரத்துக் காவல் துணை ஆணையர் வனிதா ஐபிஎஸ் பங்கேற்பு!**

கூட்டத்தில் துணைத் தலைமை போக்குவரத்து வார்டன் பி.சி. சௌந்தராஜ் வரவேற்புரை வழங்கினார்.

தலைமை போக்குவரத்து வார்டன் டி. தவமணி, அமைப்பின் ஆண்டறிக்கையை வாசித்து, மேற்கொள்ளப்பட்ட பொதுச்சேவைப் பணிகள் குறித்து விளக்கினார்.

மதுரை மாநகர போக்குவரத்துக் காவல்துறை துணை ஆணையர் வனிதா ஐபிஎஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.

போக்குவரத்து உதவிக் காவல் ஆணையர்கள் முத்தரசு, நிக்சன் மற்றும் போக்குவரத்துக் காவல் ஆய்வாளர் தங்கமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

**சாலைப் பாதுகாப்பில் போக்குவரத்து வார்டன்களின் பங்களிப்பு!**

போக்கு வரத்து வார்டன்கள் காவல்துறையுடன் இணைந்து மதுரை மாநகரில் பல்வேறு பொதுச்சேவைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, போக்குவரத்து நெரிசலைச் சீரமைத்தல், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திருவிழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின்போது வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இருசக்கர வாகன ஓட்டிகள் தலை க்கவசம் அணிவதன் அவசியம் மற்றும் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

**சிறந்த சேவைக்குச் சான்றிதழ்கள்!**

ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்தில், போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகளில் சிறப்பாகச் சேவையா ற்றிய வார்டன்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மதுரை மாநகர போக்குவரத்து வார்டன்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் நிறைவாக லட்சுமி நாராயணன் நன்றியுரை வழங்கினார்.

## மதுரையில் போதை ஒழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு யாத்திரை!

### ஆள்நடமாட்டம் இல்லாத பகுதியில் அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறி மரங்களுக்குத் துண்டுப் பிரசுரம் வழங்கிய வேலூர் இப்ராஹிம்!

மதுரை, அக்.13-

கன்னியாகுமரி முதல் சென்னை வரை நடைபெற்று வரும் 'போதையில்லா இளைய தலைமுறை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு யாத்திரை' மதுரை மாவட்டத்தில் நடைபெற்றது.

பிரதமர் நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின்படி இந்த யாத்திரை நடைபெற்று வருவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**மரங்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரம்!**

மதுரையில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், காவல்துறை கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஆள்நடமாட்டம் இல்லாத பகுதியில் அனுமதி வழங்கப்பட்டதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.






இதையடுத்து, வேலூர் இப்ராஹிம் அப்பகுதியில் இருந்த மரங்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை வழங்கி நூதன முறையில் போதை ஒழிப்பு விழிப்புணர்வை வெளிப்படுத்தினார்.

**வாய்களை மூடிக்கொண்டு விழிப்புணர்வுப் பேரணி!**

மாவட்டத் தலைவர் மாரி சக்கரவர்த்தி தலைமையில் மாவட்ட அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் தங்களது வாய்களை மூடிக்கொண்டு விழிப்புணர்வுப் பேரணியாகச் சென்றனர்.

பின்னர், போதைப் பொருட்களின் தீமைகள், இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாவதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு உரைகள் நிகழ்த்தப்பட்டன.

'Nasha Mukt Yuva போதையில்லா இளைய தலைமுறை' என்ற முழக்கத்துடன் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.





## பெரியபாளையத்தில் நல்லிரவில் வீதிவுலா சென்ற அம்மனை அம்பேத்கர்நகர் மக்கள் சிறைபிடித்து போராட்டம்

திருவள்ளூர், அக்.13-

பெரியபாளையத்தில் புரட்டாசி மாத திருவிழா மிக விமர்சையாக நடைபெற்றுக் கொண்டுவருகிறது அதன் தொடர்ச்சியாக நேற்று அம்மன் உருவம் வாகனத்தில் அலங்கரிக்கப்பட்டு வீதிஉலா நடைபெற்றது தலித்மக்கள் வாழும் பகுதியான அம்பேத்கர் நகர் பகுதிக்கு ஊர்வலம் வராததால் அம்மக்கள் அம்மனை (1:00மணிக்கு) நள்ளிரவில் சிறை பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர் சம்பவம் அறிந்துவந்த DSP இருதரப்பினரிடையே சுமூக பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதாக உறுதியளித்ததின் பேரில் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது இதானால் அப்பகுதியில் பரபரப்பு காணப்பட்டது.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், மாவட்டத்தின் சுகாதாரத் திட்டங்களின் செயல்பாடுகள் தொடர்பான மாநில பொது ஆய்வுக் குழுக் (State Common Review Mission -SCRM) கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், மேலாண்மை இயக்குநர் (தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம்.எஸ்.பி.அம்ரித் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உடன் இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை முனைவர். சோமசுந்தரம், இயக்குநர், மாநில திட்ட மேலாளர் (தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம்) டினா, உதகை அரசு மருத்துவத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீனிவாசன், இணை இயக்குநர் (மருத்துவ நல பணிகள்) மரு.ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.சோமசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

## மனைவியைத் தாக்கி சித்ரவதை செய்ததாகப் புகார்: பரமக்குடி முன்னாள் டிஎஸ்பி ஜாபர் சித்திக் கைது!

### மனைவி ஷோபனா அளித்த புகாரில் சிபிசிஜடி நடவடிக்கை வேலூர் மத்தியச் சிறையில் அடைப்பு!

பரமக்குடி, அக்.13-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் காவல் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வந்த ஜாபர் சித்திக், மனைவியைத் தாக்கித் துன்புறுத்தியதாக எழுந்த புகாரின் அடிப்படையில் சிபிசிஜடி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, வேலூர் மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

**மனைவி அளித்த புகாரால் பரபரப்பு!**

2020-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-1 தேர்வு மூலம் காவல்துறையில் நேரடியாகத் தேர்வானவர் ஜாபர் சித்திக்.

இவர் தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ஆகிய பகுதிகளில் காவல் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

அரக்கோணத்திலிருந்து கடந்த ஜூலை 4-ஆம் தேதி பரமக்குடிக்குப் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில், அவரது மனைவி ஷோபனா, ஆகஸ்ட் 4-ஆம் தேதி வேலூர் மாவட்டக் குற்றப்பிரிவு காவல்துறையிடம் புகார் அளித்தார். அந்தப் புகாரில், தனது கணவருக்குப் பல பெண்களுடன் தொடர்பு இருப்பதாகவும், தன்னைத் தாக்கித் துன்புறுத்துவதாகவும் குற்றம்சாட்டியிருந்தார்.

**ஆகஸ்ட் 21-ஆம் தேதி பணியிடை நீக்கம்!**

மனைவி அளித்த புகாரைத் தொடர்ந்து, சிபிசிஜடி காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.



இதன் ஒரு பகுதியாக, பரமக்குடியில் உள்ள டிஎஸ்பி முகாம் அலுவலகத்திற்குச் சென்று ஜாபர் சித்திக்கிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதையடுத்து, ஆகஸ்ட் 21-ஆம் தேதி ஜாபர் சித்திக் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாக வழங்கப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிபிசிஜடி போலீசார் கைது!**

இதற்கிடையே, ஜாபர் சித்திக்கைக் கைது செய்யக் கோரி அவரது மனைவி ஷோபனா, காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திலும் புகார் அளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, சிபிசிஜடி காவல்துறையினர் ஜாபர் சித்திக்கைக் கைது செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்குப் பின்னர் வேலூர் மத்தியச் சிறையில் அடைத்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

**ஏற்கெனவே பல்வேறு புகார்கள்!**

ஜாபர் சித்திக் அரக்கோணத்தில் பணியாற்றியபோது, சில வழக்குகளைக் கையாண்ட விதம் தொடர்பாகவும் புகார்கள் எழுந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது அவர் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்குச் சாதகமாகச் செயல்பட்டதாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சு. ரவி தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்ததாகவும் தகவல் தெரிவிக்கிறது.

இவை தனித்தனியாக எழுந்த குற்றச்சாட்டுகள் என்பதால், அவை நிரூபிக்கப்பட்டவை எனக் கருத முடியாது.

மனைவி அளித்த புகாரின் அடிப்படையில் முன்னாள் காவல் துணைக் கண்காணிப்பாளர் கைது செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல் காவல்துறை வட்டாரத்தில் கவனத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சமூக நல்லிணக்க விருது பெற்ற மண்ணிவாக்கம் ஊராட்சியில் ரூ.83 லட்சத்து 7 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட அரசு கட்டிடங்களை திமுக ஊராட்சி மன்ற தலைவர் திறந்து வைத்தார்

வண்டலூர், அக்.13-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட வண்டலூர் அடுத்த மண்ணிவாக்கம் ஊராட்சியில், மண்ணிவாக்கம், மண்ணிவாக்கம் விரிவு, அண்ணாநகர், அம்பேத்கர் நகர், சுவாமி விவேகானந்த நகர், கலைஞர் நகர், ராஜாத்தி நகர், கேகே நகர், புதுநகர் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.



இதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில், 2025-2026 ஆண்டுக்கான நிதியாண்டில் 15வது நிதி குழு மானியம், ஆதிதிராவிடர் நலன் தீண்டாமை கடைபிடிக்காத மற்றும் சமூக நல்லினக்க விருது திட்ட நிதியின் கீழ் ஊராட்சிக்கு உட்பட்ட புது நகரில் ரூ.13 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் நியாய விலை கடையும், இதேபோல் மண்ணிவாக்கம் கிராமத்தில் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை கடையும், கேகே நகரில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் காரிய மேடையும், மேலும் கன்னிவாக்கம் கிராமத்தில் ரூ.45 லட்சத்து 57 ஆயிரம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டன. அதன் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திமுக ஊராட்சி மன்ற தலைவர் கெஜலட்சுமி சண்முகம் கலந்துகொண்டு அரசு கட்டிடங்களை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் எம். டி.லோகநாதன், ஊராட்சி மன்ற துணை தலைவர் சுமதிலோகநாதன், வார்டு உறுப்பினர்கள் அமுதாரங்கநாதன், பூவழகிநித்ய செல்வராஜ், உஷாபிரபு, பூஷாதேவி புண்ணியப்பட்டி, சுரேஷ், லட்சுமிநாகராஜ், குமார், பத்மாதெய்வசிகாமணி, மல்லிகாபார்த்திபன், சேகர், பச்சையம்மாள் அண்ணாதுரை, ஊராட்சி செயலாளர் வீரராகவன் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161